[திரு. கோ. சி. மணி] [1990 சனவரி 23

முக்கியமாக நாம் கருதவேண்டும். நகர்ப்புறமானாலும் கிராமப்புறங்களானாலும் கூட, நாய்களினுடைய நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டியது மிக அவசியம்.

11–15 மணி.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போலவும் இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்ததின் அடிப்படையிலேயும், இந்தப் பிரச்சினைகள், நாய்க்கடி ஏற்பட்டது என்பது உண்மை. ஆனால் மாநகராட்சியைப் பொறுத்த வரையில் ஒரு நாளைக்கு 60 முதல் 70 நாய்கள் தெருக்களில் பிடிக்கப்பட்டு கொல்லப்படுகின்றன. சென்ற ஆண்டு மட்டும், 1989 டிசம்பர் முடிய, 14,868 நாய்கள் பிடிக்கப்பட்டிருக்கின்றன. இதுவரை 2 வாகனங்கள் நாய் பிடிப்பதற்காக உலவ விடப்பட்டிருக்கின்றன. மீண்டும் ஒரு வாகனம் தயாரிக்கப்பட்டு இந்த மாதமோ அல்லது அடுத்த மாதமோ, அந்த வாகனமும் இந்தப் பணியில் ஈடுபடும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசினுடைய கருத்தும், மாநகராட்சிகள், நகராட்சிகளுடைய கருத்தும் நடமாடுகின்ற நாய்களைக் கட்டுப்படுத்தவும், வெறிநாய்களாக இருந்தால் உடனடியாகக் கொல்லவும், நாய்களுக்கு உரிமம் வழங்குவதற்குக் கூட நல்ல பரிசோதனைக்குப் பிறகுதான் உரிமம் வழங்கப்படவேண்டுமென்ற ஆணை விரைவில் பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு.

திரு. சா. பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989–90 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் பதினொன்று முதல் பதினேழு வரையிலான அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு.

திரு. சா. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின், 1989–90 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவினுடைய பதினாறு முதல் பத்தொன்பது வரையிலான அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.